விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 11 | ஜ- அவ் 2 | இதழ் 340
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 24-1-85


### இந்தியப் பிரதமர் ரஜீவ் கூறுகிறார்——

## இராணுவத்தீர்வு சாத்தியமில்லை!

[புதுடில்லி]

''இலங்கையில்வாழும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள், கஷ்டங்களை நீக்குவதற்கும், அங்கு ஏற்பட்டுள்ள இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கும் அந்த நாட்டு அரசுடன் இந்திய அரசு தொடர்பு கொண்டுள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி லோக்சபாவில் நேற்று தெரிவித்தார்.

''இலங்கைஇனப்பிரச்னைக்கு அரசியல் ரீதியிலேயே தீர்வு காணமுடியும். இப்பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்த்து வைக்க முடியாது என்பதனை இந்தியா உறுதியாக நம்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. ஸி: கோசல்ராம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பிரதமர் ''இலங்கை கடற்படையினரால் கடலில்

(3-ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

### வன்முறைகள் தீர்க்காது என்கிறார் இணை அமைச்சர்

(புதுடில்லி)

''இலங்கையின் இனப் பிரச்னை தொடர்பாக காமன்வெல்த் பொதுச்செயலாளர் திரு. சிறிதத் றம்பால் வெளி

[3-ம் பக்கம் 2ம்கலம் பார்க்க]

# பலாலியில் ஹெலிகாப்டர் மீது

# 'ரெக்கட்' தாக்குதல்!

### 3 தபாலகங்களில் கொள்ளை

யாழ்ப்பபணம்]

அளவெட்டி, சுன்னாகம், தெல்லிப்பளை ஆகிய மூன்று தபால் நிலையங்களிலும் நேற்று

(3-ம் பக்கம் 5-ம் கலம்பார்க்க)

## பலத்தசேதம் எதுவுமில்லை; மக்கள் வெளியேறுகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்துக்கு அருகே ஹெலிகாப்டர் ஒன்றை நோக்கி 'ரெக்கட்' தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளபோதிலும் ஹெலிகாப்டர் பலத்த சேதம் எதுவுமின்றித் தப்பியது.

வடபகுதியில் முதற்தடவையாக நிகழ்த்தப்பட்ட இந்த 'ரெக்கட்' தாக்குதலைத் தொடர்ந்து பலாலி விமானநிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று பதட்ட நிலைமை ஏற்பட்டது:

[3ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

### சிங்கள மீனவர் ஆயுதங்களுடன் கொக்கிளாய் வருகின்றனர்!

[கொழும்பு]

கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் அடுத்த சில வாரங்களில் சிங்கள மீனவர்கள் ஆயுதங்களுடன் குடியமர்த்தப்படுவார்கள் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது இப்பகுதிக்கு இராணுவ ப் ப டை ப் பி ரி வு ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஒரு சில வாரங்களில் மீனவர்கள மீண்டும் இப்பகுதியில் தகுந்த பாதுகாப்புடன் குடியமர்த்தச் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (சு)

### இயக்கங்களின் ஒற்றுமைக்கு மதுரை கருத்தரங்கில் வலியுறுத்து!

[மதுரை]

''சேர, சோழ, பாண்டியர் காலத்திலேயே தமிழ்மக்களிடையே ஒற்றுமை இருக்கவில்லை. இதனையே இன்றைய இளம்சந்ததியினரும் பின்பற்றி வருவதுகவலைக்குரியது' என்று பேராசிரியர் தமிழ்க் குடிமகன் தெரிவித்துள்ளார்.

மதுரையில்நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஈழவிடுதலை இயக்கங்களின் கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கருத்தரங்கில் பேசிய மாணவர்கள் பலர், ஈழவிடுதலை இயக்கங்கள் ஒன்றினைய வேண்டும் என்றும் இல்லையேல் இவர்கள் தனிமை படுத்தப் படுவார்கள் என்றும் கூறி

(3 ம் பக்கம் 4-ம் கலம்பார்க்க)

### இந்தியாவுக்கு பிரதிநிதி போகமாட்டார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கும், இந்தியாவின் ஆலோசனை பெறுவதற்கும் பிரதிநிதி ஒருவரை இந்தியாவுக்கு அனுப்புவதில்லை என்று அரசாங்கம்முடிவு செய்துள்ளதாக நம்பப்படுகிறது

இதேவேளை இந்திய அர

[3-ம் பக்கம் 4-ப் கலம்பார்க்க]

### பருத்தித்துறை சம்பவம்; மற்றொருவரும் பலி!

[என். எம். கந்தசாமி]

பருத்தித்துறையில் கடந்த திங்கட்கிழமை ராணுவம் சுட்டதில், காயத்துக்குளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் மரணமானார். பருத்தித்துறை கே. வி. லேனைச் சேர்ந்த நாகலிங்கம் பஞ்சலிங்கம் என்ற

[3-ம் பக்கம் 5ம்- கலம்பார்க்க]

### தொழிற்சங்க கூட்டத்தை தடுக்க சிறில்மத்தியூ வழக்கு!

[கொழும்பு]

முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியூவைத் தலைவராகக் கொண்டுள்ள ஜாதிக சேவக சங்கமவின் செயற்குழுக்கூட்டத்திற்குத் தடைவிதிக்கக் கோரி வழக்கு ஒன்று இன்று தாக்கல்செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது.

சங்கத்தின் புதிய தலைவரைத் தெரிவுசெய்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை செயற்குழுக் கூட்டமொன்றைக் கூட்டுவதென்று, அண்மையில் சங்க உப தலைவர்களான அமைச்சர்கள் திரு.லலித்அத்துலத்முதலி, திரு. காமினி திசநாயக்கா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தை இடைநிறுத்துமாறு கோரியே திரு.

(3ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

### மற்றொரு ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

'தமிழீழ விடுதலை முழக்கம்' என்ற பெயரில் புதிய ஒலிபரப்புச் சேவை ஒன்று தற்போது தினசரி இரவு 7-00 மணி தொடக்கம் 8-30 மணிவரை நடாத்தப்படுகிறது.

இந்த ஒலிபரப்பு சிற்றலை 75 மீற்றர் 4462 கிலோஹேட்ஸ் அலைவரிசையில் கேட்கமுடிகிறது.

## நீதிமன்றங்களை ஒத்திவைக்க சட்டத்தரணிகள் கோரிக்கை!

[கா. யோகநாதன்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு சட்டத்தரணிகள் செல்வது நடைமுறையில் சாத்தியமில்லாததினால் யாழ் மாவட்டத்திலுள்ள சகல நீதிமன்றங்களிலும் விசாரணைகளை காலவரையறையின்றி ஒத்திப்போடுமாறு நீதிபதிகளை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்றுக் காலை நடந்த யாழ். சட்டத்தரணி சங்கத்தின் விசேட கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ். சட்ட நூலகத்தில் கதவுகள், யன்னல்கள் மூடப்

(3-ம் பக்கம் 1-ம்கலம் பார்க்க)

### 4ம் திகதி சென்னை வருகிறார்——

## எம்.ஜி.ஆரை மக்கள் பார்க்க பறங்கிமலையில் 'திடல்'!

(சென்னை)

தமிழக முதல்வர் திரு எம். ஜி ராமச்சந்திரன் நியூயோர்க்கிலிருந்து அடுத்த மாதம் 2ம் திகதி புறப்பட்டு 4ம் திகதி சென்னை வந்து சேருகிறார்.

பம்பாய்வரை அவர் வழக்கமான ஏர்- இந்திய விமானத்தில் வருகிறார் அதற்குப் பிறகு தேவைப்பட்டால் மட்டும் தனி விமான மூலம் சென்னை வருவார்

இந்தத் தகவல்களை தமிழ் நாடு நிதியமைச்சர் திரு இரா நெடுஞ்செழியன் நேற்றுத் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் நேற்று அமைச்சர் பேசினார்.

முதலமைச்சரை அனைவரும் ஓரிடத்தில் பார்ப்பதற்கு வசதியாக பறங்கிமலைப் பகுதியில் திடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறி

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

### வெல்லாவெளியில் கண்ணிவெடி

## 3 பொலிசார் ஸ்தலத்தில்பலி!

### இருவர் தமிழர்கள் மற்றவர் முஸ்லிம்

(மட்டக்களப்பு நிருபர் இரா உதயகுமார்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூவர் நீதிமன்றத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது நேற்றுக் காலை இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்

வெல்லாவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து சார்ஜன்ட் தர்மலிங்கம் தலைமையில் மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்காக ஜீப்பில் வந்து கொண்டிருந்தபோதே இவர்கள் மூவரும் கொலைசெய்

(4-ம் பக்கம 3ம் கலம் பார்க்க

## சடலங்கள் வந்தன!

(மட்டு. நகர்)

வெல்லாவெளியில் கண்ணிவெடி விபத்தில் மரணமான இரண்டு தமிழ்ப் பொலிசாரினதும் சடலங்கள் நேற்று மாலை ஹெலிகப்டர் மூலம் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன

விமானப்படை ஹெலிகப்

(4-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் தெற்கு புன்னை லேக்கட்டுவன் வீதி, மயிலங்காடு கிராமத்தில் 10 பரப்பு நிலம், தொழிற்ஸ்தாபனம், வீடு அமைப்பதற்கு ஏற்றது. மின்சாரம், கிணறு வசதி உண்டு. விபரங்களுக்கு; இ. கதிரமலைநாதன், ''திரிசெல்வபதி'' மயிலங்காடு, சுன்னுகம். 1479

யாழ்ப்பாணம் 49, டேவிட் ரேட்டில் 11½ குளி வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: D. A. துரைரத்தினம் 12 வேம்படி ரேட், யாழ்ப்பாணம். 1295

''சிசில்''- Sisil-R-80) குளிர்சாதனப்பெட்டி (Refrigirator) குறைந்த காலபாவிப்பிலுள்ளது, மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு திருமதி. வ. யோகரத்தினம், இராமேஸ்வரம்-லேன், உடுவில் ரேட், மானிப்பாய் வடக்கு. 1491

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணுடிஇழையாலான குசினி பேசின் (Sink), Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே ட்ரேட் சென்ரர், ஹோம் பிளுன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1484

குளிர்சாதனப் பெட்டி, ஸ்ரீடியோ செற் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி. இ. தர்மகுமார், கோகில பவனம், ஏழாலை வடக்கு, ஏழாலை. 1486

## தேவை

பிணைப்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் விண்ணப்பிக்குக:- பெயர்-வயது-விலாசம்-முன்னைய அநுபவம் (இருப்பின் நன்று) விளம்பரதாரர் இல 1493 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். 1493

பேக்கரி வேலையில் திறமையும், அனுபவமும் உடைய வேலையாள் உடன் தேவை. நேரில் சந்திக்கவும். 369, பருத்தித்துறை வீதி, [அரசடி சந்தி] நல்லூர், யாழ்ப்பாணம். 1467

நல்ல அனுபவமுள்ள பேக்கறி பாஸ் தேவை. சம்பளம் பேசி தீர்க்கப்படும். தொடர்பு: நேரில் or தபாலில் (F) பைவ் ஸ்டார்ஸ் சுவீற்ஸ் இன்டஸ்றிஸ், 244 (616) மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 1490

இரும்புக் கதிரை பின்னுவதற்கு ஆண்களும் பெண்களும் தேவை தொடர்பு கொள்ளவும். பொ. இராசட்னம், ஆனந்த வீதி, மானிப்பாய். 1481

## தவறிவிட்டது

சனிக்கிழமை 19-1-84 அன்று யாழ்தேவியில் இருந்து பளைக்கு வந்துஒருலொறியில்பிரயாணம் செய்த போது ஒரு தலையணிக்குள் கல்வி சான்றிதழ்களும், ஆசிரியர் அனுமதி பத்திரமும், பிறப்பு சான்றிதழ்மும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர், தங்கமலர், கைதடி நுணுவில், சாவகச்சேரிஎன்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1494

## FOR SALE

'Alkathene' pipe ½ (Half inch) A chemanex- Product Could Be Used For Irrigation, As Well As A Cover For Electric Wires, Our Selling Price- RS. 8/- Per metre. At Samuel, Sons And Company Limited, 206, 208 Hospital Road, Jaffna. 1462

யாழ்ப்பாண மாவட்ட

## நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி இல. 784/1 பலாலி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீராகவன் என்பவரது மரண சாதன மற்ற மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3858

சுப்பிரமணியம் ஸ்ரீராகவன் கைம்பெண் திருமதி கமலரஞ்சிதம்ஸ்ரீராகவன், இல; 784/1, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறுஇத்தால் தேவைப் படுத்தப்படுகின்ருர்.

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ம் திகதி.

கு. குலசிங்கம்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

வரைதல்
அ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
1473

## பவளக்கால் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிச் சிவன் கோவிலுக்குப் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் சித்திரத்தேரின் பவளக்கால் நாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் நடைபெறவுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றி அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

தங்கோடை, காரைநகரைச் சேர்ந்த வைத்திலிங்கம் கைம்பெண் சரஸ்வதி என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சப்பந்தமாக.

—மரணமெய்தியவர்

1. சங்கரப்பிள்ளை சுந்தரமூர்த்தியும்
2. பெண் சிவகாமசுந்தரியும் இருவரும் சின்னுலடி, தங்காடை, காரைநகர்.

—மனுதார்கள்

வழக்கு இல: த/99

எதிர்

1. ஆறுமுகம் திருவாதிரையும்
2. பெண் சிவகலையும் இருவரும் தங்கோடை, காரைநகர்.

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன சொத்துவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு தை மாதம் 30-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்ருர்கள்.

1984-ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் திகதி ஊர்காவற்றுறை


நீதிமன்றகட்டளைப்படி

அ. நடராசா
பதிவாளர்

வரைவு
ச. இளங்கோவன்
மனுதார்கள் சட்டத்தரணி.
1482

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் திரு. யோ. ச. ஞானப்பிரகாசம்



ஆண்டவன் படைப்பு:
1-1-39

ஆண்டவன் பறிப்பு:
25-12-84

மதுரமான யேசுவே நீதியும் கருணையுமுள்ள தேவனே, இரக்கம் காட்டுவதும், பொறுத்தல் அளிப்பதும் உமக்கு இயல்பாமே. எனவே இப்பூவுலகவாழ்வையும், சகல செல்வங்களையும் நீக்கி உம்முடன் ஒன்றித்திருக்க தேவரீர் நேசத்துடன் அழைத்துக்கொண்ட இன்ஸ்பெக்டர் யோ. ச. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு நித்திய பேரின்ப வாழ்வை அளித்தருளும்.


இவரின் மறைவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், பெற்ருர், சகோதரர், உறவினர்

1487

## 31-ம் நாள் நினைவஞ்சலி

சு. ஸ்ரீஸ்கந்தராசா



தோற்றம்:
10-6-1957

★

மறைவு:
24-12-1984


பல்கலைக்கழக வளவுகளில்
மாணவர் போராட்டங்கள்
அஹிம்சை வழியில் உன்
களங்களாயின!
போராடிப் போராடிப் பெற்ற உறுதியும்
அடிபட்டு எரிபட்டு எம்மவர்
அடைந்த அவலமும்
புதிய பாதைக்கு உனை இட்டுச்
சென்றன! உனது பாதையில்
நீ விதைத்த விதைகள் இன்று
முளைவிட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள்

1480

## 45-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
24
|
06
|
1963



உதிர்வு
11
|
12
|
1984

### அம்பலம் கோணேஸ்வரநாதன்

ஓ! என்;
மறக்குலத் தோழனே!
புறப்படும்போதே,
வீட்டைவிட்டு நீ;
இறப்பதற்குத் தானென்று
எமக்குத் தெரியவில்லையே!

★

இங்கே,
கொன்ருடிப் போகும்
கொடியவர்கள் மத்தியில்..
அன்ருடம்
உன் போன்ருேர்க்கு
''அவல மரணந்தான்
அங்கீகரிக்கப்பட்ட
அன்பளிப்பு''.
ஏற்றுக்கொள் தோழனே!

அதுதான்
எங்கள் கடமை
அங்கீகரிக்கப்பட்ட
பெரும் கொடுமை,
இல்லை; இல்லை;
இந்த
''இறப்பெங்கள் உடமை''
இழப்போமா?

★

என்ருலும் வெளியே...
கேட்காமல்
போனது ஏன்?
எங்கள்;
''கோணேஸ் வரன் ஆவி''?
ஓ! இங்சே, ஒரு
''உலை கொதிக்கின்றது''
போலும்;
அதனுல்தான்;
உன் ''ஆவி'' வெளியே
போனதோ தோழா?!
நாங்கள், ''இருக்கப்
பார்ப்பதா?''
அன்றேல்
''இறக்கப்பார்ப்பதா?''
என்ற,
''இறுதி முடிவை''
எவனே எடுப்பதா?
பொறுப்போம்; சகிப்போம்
இந்தப்
''பொழுதுகள்''
எங்களுக்குப்
''புலப்படுந்
தற்காலிகங்களே''—
என்பதால்
பொறுப்போம்; சகிப்போம்;
''பொறுப்பாகவே''
தோழா!

★

வருவதும் போவதும்
மானிட வரலாறு,
என்ருலும்,
இந்த ''இளமையிற்
போவதில்
எனக்கில்லை உடன்பாடு''
அதுவும்
''எத்திப் பறிக்கப்பட்டு;
எவனுலோ திருடப்பட்டு..''
இல்லைத் தோழனே! இல்லை-
எனக்கு உடன்பாடு;
அதனுல்தான்,
அளித்தோம் உனக்கொரு
அஞ்சலிக் கவியேடு.

—நண்பர்கள்

அன்னரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தும் எம் ஆருத் துயரத்தில் பங்கேற்றுக்கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

அன்புத் தாயார், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார்கள், மருமக்கள், நண்பர்கள்.

மாதகல் மேற்கு, மாதகல். 1488

# 'இலங்கையின் இனப்பிரச்னை: நியாயமான தீர்வு காண இந்தியா ஆவலுடன் உள்ளது'

## ரஜீவ் காந்தி கூறுகிறர்

புதுடில்லி, ஜன. 23

"இலங்கையின் இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு வசதியாக அந்நாட்டுடன் உயர் நிலைத் தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள இந்தியா ஆவலுடன் உள்ளது."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி இந்திய லோகசபையில் ஜனதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது பேசுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கையிலிருந்து ஏராளமான தமிழர்கள் இந்தியா வந்துள்ளதாகவும், இங்குவந்துள்ள தமிழர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்ல வழிவகுக்க விரும்புவதாலும் இப்பிரச்னைக்குத் தீர்வு ஒன்று ஏற்பட உதவுவதில் மிகவும் ஆர்வத்துடன் இந்திய அரசு இருக்கிறது.

"இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதிலிருந்து மேலும் நழுவிச் செல்வதற்கு வழிகோலும் விதத்தில் சர்வகட்சி மகாநாடு முடிவடைந்தது குறித்து நான் கவலையடைகிறேன்.

"இலங்கையில் அந்நாட்டு அரசு ஆயுதப்படையினரை நிறுத்தி வைத்திருக்கும் முறை குறித்தும் நான் அதிருப்தியடைகிறேன்" என்றுர்.

(வெ)

# இந்திய மீனவருக்கு ஆயுதம் வழங்க வேண்டும்

## மதுரைக் கருத்தரங்கில் கோரிக்கை

சென்னை, ஜன. 23

"இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படும் இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்புக்கருதி ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும்"

இவ்வாறு இந்திய மத்திய அரசைக் கோரும் தீர்மானமொன்று மதுரையில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களின் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

விறகுக் கஷ்டம் நீங்க, வீட்டுக்கு ஒரு சவுக்கு, சஞ்சீவி, இப்பில்இப்பில், வேம்பு ஆகியவை யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தில் இலவசமாக இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம். (க)

## விரிவுரைகள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் கடந்த 22ம் திகதிமுதல் ஆரம்பமாகியுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

## முறிகண்டி ரயில் விபத்து:

# 200 துருப்புகள் பலி!

## சென்னைத் தமிழ் தகவல் நிலையம் கூறுகிறது

சென்னை ஜன. 23

முறிகண்டி ரயில் விபத்தில் 200 துருப்புக்களுக்குக் குறையாமல் கொல்லப்பட்டிருப்பதாகச் சென்னைத் தமிழ் தகவல் நிலையம் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பொதுமக்கள் ரயிலில் ஏறுவதைத் தடுத்தபின்னர், ரயில் பாதையில் வைக்கப்பட்ட கண்ணிவெடிகள் மூலம் ரயில் வண்டி தகர்க்கப்பட்டதாகவும், ரயில் விபத்திற்குப்பின்னரும் தீவிரவாதிகள் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மூலம் துருப்புக்களைத் தாக்கியதாகவும் இந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டுமணி நேரத்தின்பின்னர் தீவிரவாதிகள் உமையாள்புரம் என்ற இடத்தில் மறைந்திருந்து திடீர்த் தாக்குதல் நடத்தியதில் 40 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் அக்குறிப்புத் தெரிவிக்கிறது.

மூன்று இராணுவ முகாம்களில் காவலில் வைக்கப்பட்டிருந்த 150 தமிழ்பெண்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கொடுமைகள் தொடர்பாகத் தீவிரவாதிகள் இத்தாக்குதலை மேற்கொண்டதாக அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

சிறில் மத்தியூ இன்று வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.

## இந்தியப் பிரத..

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

சுட்டுக்கொல்லப்பட்ட தமிழக மீனவர்களின் உயிர்சேதத்துக்கும். பொருட்சேதத்துக்கும் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா கோரியுள்ளது. சென்ற இரு மாதங்களில் நடந்த இரு சம்பவங்களில் மூன்று இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டது குறித்து இலங்கை அரசிடம் இந்தியா கடுமையாக ஆட்சேபம் தெரிவித்துள்ளது" என்றுர்.

நேற்று ராஜ்ய சபாவில் பேசிய போதும் பிரதமர் "இலங்கை இனப்பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்த்து வைக்க முடியாது என்றும். இலங்கை அரசு அப்பிரனைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றை காணவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## நீதிமன்றங்களை..

(1-ம்பக்க4ம்கலத் தொடர்ச்சி)

பட்ட நிலையில் ரகசியமாக சங்கத்தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சட்டத்தரணிகள் தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை எடுத்துக் கூறினர்கள்.

சட்டத்தரணிகள் மட்டுமன்றி, கட்சிக்காரர்களும், நீதிமன்ற உத்தியோகத்தர்களும் போக்குவரத்து உட்பட பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதாக சட்டத்தரணிகளால் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இத்தீர்மானத்தை யாழ். மாவட்டத்திலுள்ள சகல நீதிபதிகளுக்கும்அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது. [க]


**றீகல் மினி**

தினசரி 10-15, 1-15 மட்டும்.

விஜயகாந், விஜி, நம்பியார் நடிக்கும்

பி எஸ். வீரப்பாவின்

**சாட்சி**

**லிடோ** சினிமா

தினசரி 10-30, 2-00

MISSION BATANGAS

(War Film - Action packed)

**வெலிங்டன்**

(யாழ். நகர்)

10-30, 2-15,

கமல் - மாதவி

**டிக் டிக் டிக்**

(கலர்)


## வன்முறைகள்...

[1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி]

யிட்டுள்ள கருத்துப் பற்றி இந்தியாவுக்குத் தகவல் ஏதும் இல்லை" என்று இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு குர்ஷித் ஆலம்கான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் மீண்டும் ஏற்பட்டதையடுத்து அப்பிரச்னைக்குத் தீர்வொன்றைக்காண திரு. றம்பால் எடுத்துவரும் முயற்சிகள் குறித்துக் கொண்டுவரப்பட்ட கவனஈர்புத்தீர்மான விவாதத்தின்போது இந்திய லோகசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

திரு. குர்ஷித் ஆலம்கான் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கையில் இடம்பெறும் தொடர்ச்சியான வன்முறைகளும், அவற்றிற்கு எதிரான எதிர்த்தாக்குதல்களும் அந்நாட்டு இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க உதவமாட்டாது.

"இந்திய மீனவர்களைத் துன்புறுத்தும் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்றும் இலங்கை அரசிடம் இந்திய அரசு கேட்டுள்ளது. இதுதொடர்பாக இந்தியா தனது வன்மையான ஆட்சேபத்தை மூன்றுதடவை இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளது.

"இந்திய மீனவர்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுக்கும், உயிர் இழப்புக்களுக்கும் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் இந்திய அரசு இலங்கை அரசிடம் வற்புறுத்துயுள்ளது.

"கடந்த பல மாதங்களாக இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்குமாறும் இந்திய அரசு கேட்டுள்ளது.

"எதிர்காலத்தில் இந்தியக் கடல்பிராந்தியத்தில் ஊடுருவல் இருக்காதென்று இலங்கை அரசு உறுதியளிக்கவேண்டும் என்று இந்திய அரசு கேட்டுள்ளது.

"ஏற்கனவே 40,000 தமிழர்கள் இந்தியா வந்துள்ளனர். இலங்கையில் நிலைமை மோசமாகிவருவதால் இன்னும் பல தமிழர்கள் புகலிடம் தேடி இந்தியாவிற்கு வரும் நிலைமை உருவாகலாம். (வெ)

## அச்சுவேலியில் குண்டுகள்!

(கோப்பாய்)

அச்சுவேலியில் ஆயுதப்படையினர் நேற்று நண்பகல் சோதனை நடத்தினர்கள். அச்சமயம், பத்திற்கு மேற்பட்ட சயிக்சிள்கள், வாகனத்தினல், வீதியில் போட்டு நெரிக்கப்பட்டன

அச்சுவேலி தபால் நிலயத்திற்கு முன்னல் ஆயுதப் டையினர் தேடுதல்நடத்தியபோது மூன்று குண்டுகள் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தனர்.

## பலாலியில்...

[1ம் பக்க 3ம்கலத் தொடர்ச்சி]

குறிப்பிட்ட ஹெலிகாப்டர் சுமார் ஒரு மணியளவில் ஒரு துறையிலிருந்து புறப்படும்சமயம் பலத்த சத்ததுடன் 3 தடவை வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும், இதன்பின் விமானம் இறங்கியதாகவும் இந்த வெடிச் சத்தங்கள் பல மைல் தூரத்துக்குக் கேட்டதாகவும் கூறப்படுகிறது இச்சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வெடிச்சத்தம் இதுவரை காலமும் கேட்டிராதவாறு புதிய பயங்கர ஓசையுடன் கேட்டதாகவும் இச்சத்தம் 'றொக்க லோஞ்சர்' தாக்குதல் சத்தமாக இருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது.

பலாலியைச் சுற்றியுள்ள கிராமங்களில் பதட்ட நிலை ஏற்பட்டதால் வாகனப் போக்குவரத்து நேற்று முற்றுக ஸ்தம்பித்தது மாணவர்கள் வீடுசெல்ல முடியாமல் பாடசாலைகளில் தங்கியிருந்தனர் கடைகள் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பல லி வசாவிளான், புன்னலைக்கட்டுவன், மற்றும் பலாலியை அண்மித்த கிராமங்களில் ஆயுதப்படையினர் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

இச்சம்பவம் நடைபெறுவதற்குமுன்னர் ஹெலிகப்டர் அக்கிராமங்களை உள்ளிடு. அச்சுவேலிப் பகுதிகளிலும் தாளப்பறந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

## இயக்கங்களின்...

1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

ஞர்கள்.

குறிப்பிட்ட இயக்கமொன்றைத்தவிர மற்றஎல்லா இயக்கங்களினதும் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டதாக [illegible] தெரிவிக்கப்பட்டது.

## இந்தியாவுக்கு...

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

சாங்கத்தின் உயர்மட்டத்தில் இலங்கை குறித்து நல்லெண்ணம் இருந்து வருகிறதென்றும், இருநாடுகளும் தமக்கிடையே ஏற்பட்டுள்ள மீனவர் அத்துமீறல் பிரச்னையை இலகுவாக எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்வது என்றும் அமைச்சரவை நேற்று தீர்மானித்தது என்று ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பருத்தித்துறை...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

இவரது சடலம், மரண விசாரணையின்பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிகிச்சைபெற்றுவரும் மற்றுமிரு இளைஞர்களும் ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிவிட்டதாகத் தெரியவருகிறது.

தமது காலில் விழுந்து கும்பிடச்செய்த நிலையில், ஒருஇளைஞரை ராணுவம் சுட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறையில் திங்கள் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஸ்தலத்தில் ஐவர் [illegible] தெரிந்ததே.

## 3 தபால.

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

இனந்தெரியாத இளைஞர்களால் துப்பாக்கிமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் கொள்ளையிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதுபற்றிய விபரம் எதுவும் இதுவரை தெரியவில்லை.


உ

**திருமண அழைப்பு**

காலம்: 27 - 01 - 1985 ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி முதல் 9 - 00 மணிவரை

இடம்: மணமகள் இல்லம்

(நீர்வேலிக் கிராமசபை அருகாமையில்)

மணமகன்: திருநிறை செல்வன்

**ச. ஜெகதீஸ்வரன்**

(ஹற்றன் நாஷனல் வங்கி. ஹற்றன்)

மணமகள்: திருநிறை செல்வி

**சா. கார்த்தியாயினி**

உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

நீ. சச்சிதானந்தேசுவரக்குருக்கள்,
வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

ஐ. சோமசுந்தரஐயர்,
[உரிமையாளர் சக்தி நூல்நிலயம்,
மட்டுநகர்)
கா. சாம்பசதாசிவக்குருக்கள்,
ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையார்
தேவஸ்தானம், நீர்வேலி.

1489

## மணிவாக்கு

வாய்மை ஒன்று: வாக்குவாதங்கள் பல, தர்மம் ஒன்று; தர்க்கங்கள் பல. கடவுள் ஒன்று; கட்சிகள் பல.''

— குன்றக்குடி அடிகளார்

# நமது நோக்கு

## பயங்கரவாதம்: இரு பெரும் சிக்கல்கள்

சர்வதேச பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அமெரிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றி காண்பதில்லை.

பயங்கரவாதிகள் யார்? விடுதலைப்போராளிகள் யார்? என்ற விவாதம் முடிவற்ற நிலையில் காணப்படுவதால் அமெரிக்க நீதிமன்றங்கள் இன்றைய சட்டத்தை திருத்த இடமளிக்கவில்லை.

அமெரிக்க அரச நிருவாகம் அத்தேசத்தில் தஞ்சம் புகும் பயங்கரவாதிகளை குறிப்பிட்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்க இயலாது சட்ட மாற்றத்தை வேண்டி நிற்கின்றது.

ஜனநாயக ஆட்சி அமெரிக்காவில் பல வீனமடையவில்லை. நான்கு வருடங்களுக்கொருமுறை ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆக வேண்டும்; பொதுஜன வாக்கெடுப்புக்குஇடமில்லை. அதுமட்டுமல்ல ஜனாதிபதியின் அளவற்ற அதிகாரம் நீதிமன்றத்தால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுவதும் கண்கூடு.

தமது நாட்டுக்கோ, சமூகத்துக்கோ அரசியல் உரிமைகோரி தம்முடைய உயிரையே அதற்குத் தியாகம் செய்யும் ஒருவர் அல்லது ஒரு கூட்டத்தினர் ஆட்சிக்கெதிராக ஆயுதப் போரில் ஈடுபட்ட போதும் வன்செயல் எதுவும் உரிமைப் போராட்டத்துக்குரியதானல், அவரோ அக்கூட்டத்தினரோ விடுதலை வீரராகக் கொள்ள வேண்டுமென்பது அமெரிக்காவின் சட்டமுறை.

தன்னுடைய நட்புநாடுகளில் அரசியல் கொலையில் ஈடுபடும் தீவிரவாதிகள் அமெரிக்காவில் தஞ்சம் புகுவது சாதாரணம் அமெரிக்க அரச நிர்வாகம் இவர்களைக் குறிப்பிட்ட நாடுகளுக்கு அனுப்ப முடியாது திண்டாடுகிறது; சட்டத்தில் மாற்றம் வேண்டி நிற்கின்றது.

இந்தச் சிக்கலான நிலையிலும் நட்பு நாடுகளுக்கு ஆயுத உதவிசெய்வதும், சில இடங்களில் நேரடி ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அமெரிக்க அரசின் இன்றைய போக்குகள்

எங்கள் நாட்டைப் பொறுத்தளவில் ''பயங்கரவாதிகள் இந்தியாவில் புகலிடம் பெறுகின்றனர்; அங்கிருந்து எங்கள் நாட்டைத் தாக்க இந்தியா இடமளிக்கிறது'' என்ற குற்றச்சாட்டு அடிக்கடி சுமத்தப்படுகிறது.

இதனை மறுக்கும் இந்திய அரசுக்கு எதிராக இலங்கை என்ன நடவடிக்கை எடுக்கலாம் அரசியல் தந்திரத்தால் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதானல் இந்தியா இதனை வரவேற்கும். கடற் சண்டை உதவாது.

தமிழ்ப் பயங்கரவாதிகளை இந்தியா விடுதலை வீரர்கள் என்றுகொள்ள என்னதடை இருக்கிறது? அங்கிருந்து போராளிகள் பயிற்சிபெற்று இந்த நாட்டைத் தாக்க இந்தியா ஒருபோதும் அனுமதியாது. ஆனல் அங்கு புகலிடம் பெறும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக, இலங்கை அரசு சுமத்தும் குற்றங்களை பயங்கரவாதம் என்று கொள்ளாது, விடுதலைப் போராளியின் செயல் என்று கொள்ள அதற்குரிமையுண்டு.

காலஞ்சென்ற பிரதமர் இந்திராகாந்தி இக்கருத்தை உடையவராகவும் தமிழ்ப் போராளிகளின் செயல்களை மிக அவதானத்துடன் அணுகியதால் அனுதாபங் கொண்டிருந்ததை நாமறிவோம்.

நாட்டைப் பிரிக்குமளவிற்கு போர் முனைவதை இந்தியா ஒருபோதும் அனுமதியாதென்று இறுக்கமாகச் சொல்லி, செயலிலும் காட்டினர்; அதே சமயம் தமிழ்மக்கள் இலங்கை ராணுவத்துக்கோ, சிங்கள தீவிரவாதிகளுக்கோ பலியாவதை இந்தியா பார்த்துக் கொண்டிராதென்றும் உறுதி கூறியிருந்தார்.

எங்கள் நாட்டின் பயங்கரவாத ஒழிப்பில் இது ஒரு சிக்கல்; மற்றது தமிழ் மக்கள் 'விடுதலைப் போராளிகள்' என்று கொள்ளும் இளைஞர் இயக்கங்கள், ஆதியிலே ''ஒரு சிறு குழப்பக்காரர், துப்பாக்கி சுழற்றும் தமிழ்ப் பொடியன்கள்'' என்று கருதப்பட்டது.

எங்கள் பத்திரிகை இவர்கள் நடத்திய பல அரசியல் கொலைகளை மிகத் தீவிரமாகக் கண்டித்தது. சுமார் பத்து வருடங்களுக்கு முன யாழ். நகர் முன்னை நாள் முதல்வர் துரையப்பா கொல்லப்பட்டபோது நாம் தீட்டிய கண்டனம் இன்றும் நினைவுக்கு வருகிறது.

இன்று பத்தாவது வருடத்தில் நிலைமை எவ்வளவு தூரம் மாறிவிட்டது பயங்கரவாதிகளுக்கு இன்றியமையாத மக்கள் ஆதரவு உண்டென்றால் அதற்குதவியது அரசின் பயங்கரவாதத் தடை நடவடிக்கைகள்.

மலேசியாவில் கம்யூனிஷ்ட் கெரில்லா யுத்தம் மக்கள் ஆதரவு பெறவில்லை. ஆனல் யுத்தம் பதின்மூன்று வருடங்கள் நடந்தது; 8100 கெரில்லாக்களை முறியடிக்க 2½ லட்சம் போர்வீரர் தேவைப்பட்டனர்

மனிதபலம், ஆயுதபலம், வேற்றுநாட்டின் உதவி- இவையெல்லாம் மக்கள்ஆதரவைப் பெற்ற கெரில்லா இயக்கங்களை இலகுவில் முறியடிக்க உதவா என்பது இன்று நம்பக்கூடிய அளவிற்குத் தெளிவாகின்றது.

## நகரில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையபகுதியில் நேற்று நண்பகல பதற்றநிலை ஏற்பட்டது. கடைகள் யாவும் பூட்டப்பட்டது. மக்கள் சிதறி ஓடினர்கள். பஸ்கள், வாகனங்கள் திடீரென புறப்பட்டது

ஆயுதப்படையினர், பஸ் நிலையத்திற்கு நடந்து வருகிறார்கள் என்ற வதந்தி பரவியதே இந்த பதற்றத்திற்கு காரணமாம். சில நிமிடங்களில் நகர் மீண்டும் வழமைக்குத் திரும்பியது. (க)

## மானிப்பாய் பிரஜைகள்குழு

[மானிப்பாய்]

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மானிப்பாய் பட்டினபிரஜைகள்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் நடந்தது போஷகராக கே. முத்துவேர்பிள்ளையும், தலைவராக எஸ். ரி. சாறியும், செயலாளர் தனதிகாரியாக ஈ. எம். டி. மேதரும். துணைச்செயலாளராக டபிள்யூ ஜி அன்னப்பா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கொள்ளை முயற்சியே!

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கு பணம் எதுவும்கொள்ளை அடிக்கப்படவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22-ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் பெருந்தொகையானபணம் கொள்ளையடிக்கப்பட்டதாகச் செய்தி வெளியானது தவருனதாகும். [மா]

## சடலங்கள்...

[1-ம்பக்க5-ம்கலத்தொடர்ச்சி]

டரில் இரு சடலங்களும் நேற்றுமாலை 4 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றுமாலையே பலாலி விமானநிலையத்தை சென்றடைந்த இச்சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

## 3 பொலிஸார்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

யப்பட்டார்கள்.

வெல்லாவெளியிலுள்ள றெட்பானவுக்கு சமீபமாக இவர்கள் ஜீப்பில்வந்து கொண்டிருந்தபோது, வீதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்து ஜீப் சேதத்துக்குள்ளானது ஆயினும், இந்த விபத்தில் ஐவரும் தப்பிவிட்டனர். ஆனல் அங்கு மீண்டும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோது, மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலையுண்டனர். கொலையுண்டவர்கள் விபரம் வருமாறு:-

சார்ஜன்ட் தர்மலிங்கம் (சுன்னாகம்) கான்ஸ்டபிள் மாசிலாமணி (மாதகல்) கான்ஸ்டபிள் சுலைமான்லெப்பை.

சாரதியும்,இன்னெருகான்ஸ்டபிளும் தப்பிவிட்டதாக தெரியவந்துள்ளது.

## எம். ஜி. ஆர்...

(1ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி)

ஞர்.

அவரைப் பார்க்கும்போது மாலையோ, பரிசோ அளித்து அவரைத் தொல்லைப்படுத்த வேண்டாமென்றும் அவர் தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டார்

எம் ஜி ஆர் தனது இல்லத்தில் ஒன்றே இரண்டு நாட்கள் ஓய்வு எடுத்த பின்னர், தமிழக கவர்னரைச் சந்தித்து தமிழ்நாடு புதியஅமைச்சரவை குறித்து விவாதிப்பாரென்றும் நெடுஞ்செழியன் கூறினர்.

அன்று முடிவு எடுக்கப்படும் திகதியில் தமிழக புதிய அமைச்சரவை பதவி ஏற்கும் என்றும் அவர் கூறினர்.

## வெளியே செல்லமுடியாத ஆசிரியர்களின் பிரச்னை!

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தொடர்ந்து, போக்குவரத்து கஷ்டத்தினல் யாழ் மாவட்டத்திற்கு வெளியே செல்லமுடியாமலிருக்கும் தமிழ் ஆசிரியர்கள் இம்மாதம் 25ம் திகதி வடமாநில கல்வப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்திருந்தவர்கள் இம்மாதம் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பித்தபோதுஅங்குசெல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

நேற்று சில ஆசிரியர்கள் யாழ். கல்விக் கந்தோரில் சென்று தங்கள் கஷ்டம் பற்றி விளக்கினர்கள்.

யாழ். மாவட்டத்திற்கு வெளியில் செல்லமுடியாமலிருக்கும் சகல ஆசிரியர்களையும் இம்மாதம் 25ம் திகதி யாழ்ப்பாணம் கல்விக் கந்தோருக்கு வந்து தங்கள் கஷ்டங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். [க]


## மரண அறிவித்தல்

### கா. சிதம்பரநாதன் (சைவம் மாஸ்டர்)

உடுவில், இளைப்பாறிய ஆசிரியர் காசிநாதர் சிதம்பரநாதன் காலமானர். இவர் நேசமலரின் கணவரும், ஜெகதீஸ்வரி, கெகதாம்பிகை ஜெகதீஸ்வரன், ஜெகபாலினி, கேதீஸ்வரன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற S. முருகேசு, S. கதிர்காமத்தையா, றஞ்சிதமலர், A. மகேஸ்வரன், சுசீலா ஆகியோரின் மாமனும் ஆவார். ஈமக்கிரியைகள் 24-1-85 வியாழக்கிழமை (இன்று) பி ப. 2 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெறும்.

1506

## மரண அறிவித்தல்

### க. இரத்தினசிங்கம்

திருநெல்வேலியைச் சேர்ந்த க. இரத்தினசிங்கம் [அதிபர்: அனுராதபுரம் விவேகானந்தா மகாவித்தியாலயம்] காலமானர். இவர் கெங்காதேவியின் அன்புக் கணவரும் சிவசக்தி, சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னரது ஈமக்கிரியைகள் 24-01-85 (இன்று)வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

''கைலாச வாசா''
திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணம். (1504)

## மரண அறிவித்தல்

### S. A. தர்மலிங்கம்

அரியாலை S. A. தர்மலிங்கம் (சுங்க இலாகா) காலமாகிவிட்டார். இவர் ராணியின் அன்புக்கணவரும் ஜெகன், றதீபன், றேசனி, பிரதீபன் ஆகியோரின் அன்புத்தகப்பனும் ஐயாத்துரை, கந்தையா, சோமசுந்தரம், பொன்னப்பலம், பூவிலிங்கம், பூபணி, இராசேந்திரம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், நேசம்மா, காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை (நயினதீவு) ஆகியோரின் அன்பு மருமகனும், மலர், மணி, இராசேஸ், குணாளன், பபா, தயாளன், அசோகன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னரின் நல்லடக்கம் 25ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நடைபெறும்.

கண்டி றோட். அரியாலை,
(1503) யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அபிராமிப்பிள்ளை முருகேசபிள்ளை

(நயினதீவு)

நயினதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அபிராமிப்பிள்ளை முருகேசபிள்ளை காலமாகிவிட்டார். அன்னர் காலஞ்சென்ற முருகேசபிள்ளையின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரி, நாகம்மா, சந்திரசேகரம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பரமனந்தம், விசாலாட்சி (நைஜீரியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சனகசபை, அப்பலவாணர் (உரிமையாளர், அம்பலவாணர் அன் சன்ஸ், கொழும்பு. யாழ்ப்பாணம்), கனகாம்பிகை, செல்லம்மா, பூபாலசுந்தரம் [நைஜீரியா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 24 1-85 வியாழக்கிழமை நயினதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (1497)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 16ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Ee anadu 100236/81 Eelanadu P. O. Box 49. Telegram Tele phone number 22389-24126